සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Maths

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 7	கணிதம்

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I


- எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

01) 270^0 குறிக்கும் கோணத்தின் வகையினை எழுதுக.

02) ஒழுங்கான அறுகோணி ஒன்றின் சமச்சீர் அச்சுக்களின் எண்ணிக்கை யாது?

03) 0.23 இனை சதவீதமாகக் குறிப்பிடுக.

04) உருவில் தரப்பட்டுள்ள கனவுருவின் கனவளவைக் காண்க.




05) ஆயிசாவின் பிறந்த தினம் 2023 மே 29 ஆகும். 2025 டிசம்பர் 10 அன்று அவளின் வயது யாது?

06) சுருக்குக. $5x - 3x + 4x$

07) கி.பி 202….. நெட்டாண்டாக அமைய இடைவெளிக்கு பொருத்தமான இரு எண்களை குறிப்பிடுக.

08) AB=5 cm எனின் ஐங்கோணி ABCD இன் சுற்றளவைக் காண்க.



09) 12 + (-7) இன் பெறுமானம் காண்க.

Past Papers Wiki

10) $3x - 1 = 17$ இனை தீர்க்க.

11) பாகைமானியினைப் பயன்படுத்தி 140^0 இனை வரைக.

12) கிரிக்கட் போட்டி ஒன்றில் குசல் 48 ஓட்டங்களையும், பதும் 56 ஓட்டங்களையும் பெற்றனர். குசல் மற்றும் பதும் பெற்ற ஓட்டங்களை எளிய விகிதங்களாகத் தருக.

13) 18, 24 இன் பொ.ம.சி யினைக் காண்க.

14) R={1 தொடக்கம் 36 வரையிலான சதுர எண்கள்} தொடையினை வென்வரிப்படத்தில் காட்டுக.

15) a=3, b=5 எனின் $4a^2b$ யின் பெறுமானம் காண்க.

16) $3\frac{3}{4}$ ..... $3\frac{2}{7}$ இடைவெளிக்கு பொருத்தமான குறியீட்டினை < , > , = என்பவற்றில் இருந்து தெரிவுசெய்க.

17) 1 தொடக்கம் 6 வரை எண்ணிடப்பட்ட சதுரமுகி தாயக்கட்டை ஒன்றினை சுண்டும்போது கிடைக்கும் பேறுகள் அனைத்தையும் எழுதுக.

18) 1:100 எனும் அளவிடைக்கு வரையப்பட்ட உரு ஒன்றில் 7cm இனால் காட்டப்படும் நீளத்தின் உண்மை நீளம் யாது?

19) தெசலாக்கம் ஒன்றின் இரு பண்புகளை எழுதுக.

20) சுருக்குக. 200g375mg x 25

Past Papers Wiki

பகுதி - II


- **முதலாம் வினாவிற்கும் ஏனைய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.**
- **முதலாவது வினாவிற்கு 16 புள்ளிகளும் ஏனைய வினாக்களுக்கு 11 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.**

01) a) i. நேர்கோடு ஒன்றினை வரைவதற்கு பயன்படுத்தும் இரண்டு கருவிகளை எழுதுக. (புள்ளி 2)
ii. AB = 7 cm நீளமான ஒரு நேர்கோட்டினை வரைக. (புள்ளி 2)
iii. AB யின் நடுப்புள்ளியினை O எனக் குறிக்க. (புள்ளி 1)
iv. OA யினை ஆரையாகக் கொண்ட வட்டம் ஒன்றினை வரைக. (புள்ளி 2)
v. மேலே உள்ள வட்டத்தினைப் பயன்படுத்தி ஒழுங்கான அறுகோணி ஒன்றினை வரைக. (புள்ளி 3)

b) தெக்காட்டின் தளம் ஒன்றினை வரைந்து பின்வரும் புள்ளிகளை அதில் குறிக்க.
A =(2,2) B=(4,5) C=(3,0) D = (0,4) E=(0,0) (புள்ளி 6)


02) a) i. சதுரக்கூம்பகம் ஒன்றின் முகம், உச்சி, விளிம்புகளின் எண்ணிக்கையினை எழுதுக. (புள்ளி 3)
ii. முக்கோண அரியம் ஒன்றின் புறவுருவின் வலையினை வரைக. (புள்ளி 3)
iii. ஓர் திண்மம் ஒயிலரின் தொடர்பினை பூர்த்தி செய்கிறது. அத் திண்மம் 6 உச்சிகளையும் 9 விளிம்புகளையும் கொண்டிருப்பின் அதன் முகங்களின் எண்ணிக்கை யாது? (புள்ளி 2)

b) கீழே கனவுருவும் சதுரக்கூம்பகமும் இணைத்து உருவாக்கப்பட்ட ஓர் திண்ம வடிவம் காட்டப்பட்டுள்ளது.



i. அதன் முகம், உச்சி, விளிம்புகளின் எண்ணிக்கையினை குறிப்பிடுக. (புள்ளி 1)
ii. மேலே காட்டப்பட்ட திண்மத்திற்கு ஒயிலரின் தொடர்பு பொருந்துகிறது என லக்சிகா கூறுகிறாள். அவளின் கூற்று உண்மை என நிறுவுக. (புள்ளி 2)

03. 1:500 என்னும் அளவிடையில் வரையப்பட்ட நீச்சல் தடாகமொன்றின் அளவிடைப்படம் கீழே தரப்பட்டுள்ளது. தடாகமானது A, B எனும் இரு பகுதிகளைக் கொண்டது.



i. இதன்படி 1cm இனால் குறிக்கப்படும் உண்மை நீளத்தை காண்க. (புள்ளி 2)
ii. தடாகத்தின் உண்மை நீளத்தை காண்க. (புள்ளி 2)
iii. தடாகத்தின் உண்மை சுற்றளவைக் காண்க. (புள்ளி 2)
iv. A பகுதியின் உண்மை பரப்பளவைக் காண்க. (புள்ளி 2)
v. A , B பகுதிகளின் பரப்பளவுகளுக்கிடையிலான விகிதத்தை காண்க. (புள்ளி 3)

04) ஒரு குறிப்பிட்ட வருடம் ஒன்றில் ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் மாதங்களில் கணிதத்தில் நடாத்தப்பட்ட 20 புள்ளிகள் வீதம் வழங்கப்படும் இரு மாதாந்த பரீட்சைகளில் தரம் 7 மாணவர்கள் 4 பேர் பெற்றுக்கொண்ட புள்ளிகள் கீழே தரப்பட்டுள்ளது.

மாணவர் பெயர்	மாதம்	
	ஆகஸ்ட்	செப்டம்பர்
சிபானா	15	13
அஸ்கி	18	19
தாசிம்	17	20
சதீஷ்	12	18

i. மேலுள்ள தகவல்களை கூட்டு சலாகை வரைபில் காட்டுக. (புள்ளி 6)

ii. ஆகஸ்ட் மாதத்தில் கூடிய புள்ளிகள் பெற்றவர் யார்? (புள்ளி 2)

iii. ஆகஸ்ட் மாதத்தை விட செப்டம்பர் மாதத்தில் அதிக புள்ளி வளர்ச்சியைப் பெற்றவர் யார்? (புள்ளி 2)

iv. தாசிம் ஆகஸ்ட் மாதத்தில் பெற்றுக்கொண்ட புள்ளியை சதவீதமாகத் தருக. (புள்ளி 2)

05) a) மூன்று தரம் ஏழு மாணவர்களான சதானா, சுபா, நுமா ஆகியோர் மூன்றாம் தவணை பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளின் விகிதம் முறையே 5 : 3 : 2 ஆகும். அவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகை 2000 எனின் அவர்கள் பெற்ற மொத்த புள்ளிகளை வேறு வேறாகக் காண்க. (புள்ளி 5)

b) i. $\frac{7}{20}$ சதவீதமாகத் தருக (புள்ளி 2)

ii. 45% பின்னமாகத் தருக. (புள்ளி 2)

iii. 25 மாணவர்களைக் கொண்ட வகுப்பு ஒன்றில் 14 பேர் பெண் பிள்ளைகள் எனின் ஆண் பிள்ளைகளின் சதவீதத்தை காண்க. (புள்ளி 2)

06) (a) தொடை P = {0 இற்கும் 25 இற்கும் இடையில் உள்ள முதன்மை எண்கள் }

i. P யின் மூலகங்களை இரட்டை அடைப்பினுள் எழுதுக.

ii. P யின் மூலகங்களை வென்வரிப்படத்தில் காட்டுக. (புள்ளி 4)

(b) சுருக்குக. i. $3 + 5\,(7 - 1)$ (புள்ளி 2)

ii. 7.56×23 (புள்ளி 2)

iii. $3\frac{1}{3} + 2\frac{3}{4}$ (புள்ளி 3)

07) a) பேனை ஒன்றின் விலை ரூபா x ஆகும். அவ்வாறான மூன்று பேனைகளையும் ரூபா 10 உடைய அழிறப்பர் ஒன்றையும் கொள்வனவு செய்ய ரூ.85.00 செலவாகியது.

i. மேற்படி தொடர்புகளுக்குரிய சமன்பாடு ஒன்றை உருவாக்குக. (புள்ளி 2)

ii. சமன்பாட்டை தீர்த்து பேனையொன்றின் விலையை காண்க. (புள்ளி 3)

b) i. தூய தெசலாக்கம் என்றால் என்ன? (புள்ளி 2)

ii. தூய தெசலாக்கம் ஒன்றை அமைக்கக்கூடிய இரு தள உருக்களை எழுதுக. (புள்ளி 2)

iii. இரு வேறு தளவுருக்களை உபயோகித்து அரைத் தூய தெசலாக்கம் ஒன்றை அமைக்க. (புள்ளி 2)

PAST PAPERS WIKI
WWW.PastPapers.WiKi

Downloaded From Past Papers WiKi - Sri Lanka's Largest Past Paper Bank